# செம்பாக்கம் நகராட்சியில் 7.3.2019ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சியில் 28.2.2018 அன்று பெறப்பட்ட வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணிக்காக இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 15 வரை உள்ள வீடு மற்றும் வணிக வளாகங்களுக்கு 8200 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணி | 290.00 | 1. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி |
| | | | 2. மெஸ்ஸர்ஸ். சிம்லா கூல் மேக்கர்ஸ் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கு விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) 1.3.2019ல் ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 15 வரை உள்ள வீடு மற்றும் வணிக வளாகங்களுக்கு 8200 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணி | 290.00 | 1. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி | மதிப்பீட்டை விட 4.91% அதிகம் |
| | | | 2. மெஸ்ஸர்ஸ். சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 13.57% அதிகம் |

மேற்படி பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட இருவருமே அதிகமாக வழங்கியுள்ளனர். மதிப்பீட்டை விட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை

அதிகமாக உள்ள காரணத்தினால் ஒப்பந்த தொகையினை குறைத்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு 1.3.2019ல் கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் 4.3.2019ம் தேதிய தனது கடிதத்தில் குடிநீர்பணிக்கான பொருட்களின் விலை உயர்வு மற்றும் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஆகிய காரணங்களினால், மதிப்பீட்டை விட குறைவாக வழங்க இயலாது என தெரிவித்தும், இறுதியாக மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக 4.71%-க்கு இப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 15 வரை உள்ள வீடு மற்றும் வணிக வளாகங்களுக்கு 8200 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணி | 290.00 | 1. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி | மதிப்பீட்டை விட 4.71% அதிகம் |
| | | | 2. மெஸ்ஸர்ஸ். சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 13.57% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக 4.71%-க்கு கூடுதல் தொகைக்கு இப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளதை மன்றம் பரிசீலத்து முடிவு செய்யலாம்.
2. மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.457 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல் –2019 முன்னிட்டு செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் மற்றும் அரசு கட்டிட சுவற்றில் உள்ள விளம்பரங்கள் அனைத்தும் அழிக்க கோரி மாவட்ட தேர்தல் பிரிவிலிருந்து whattsapp மூலம் வரப்பெற்ற செய்திக்கினங்க, இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள விளம்பரங்களை அழிக்கும் பணியினை அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி மேற்கொள்ள ஆகும் உத்தேசசெலவு ரூபாய் 3,00,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.458 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

நாடாளுமன்ற தேர்தல் 209 முன்னிட்டு தேர்தல் நன்னடைத்தை விதிகள் அமுலுக்கு கொண்டு வந்துள்ளதால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுவரொட்டிகள், பேணர்கள் மற்றும் கொடி கம்பங்கள் அகற்றுதல் ஆகிய பணிகளை உனடியாக மேற்கொள்ள மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் தேர்தல் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து இப்பணிகளை அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.200000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15 ன் கீழ் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.459 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகிளின் சட்டம் பிரிவு 306-ன் படியும் 2016ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் விதி 6(4)ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3,6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் படி 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் நெகிழி (Plastic) மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்து செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1. (i) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.
2. (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாள்ர, துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.
3. (iii)**மேல் முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

4. (iv)**தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருட்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள்.

5. (v) **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு:**

**1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்**

a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
e) 2000ம் அதற்கும் மேல்.

**2. வணிக வளாகங்கள்**

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்.
b) பல்பொருள் அங்காடிகள் பெரியது
c) திரையரங்குகள்
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனை கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்.
e) கல்வி நிறுவன வளாககங்கள்
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாககங்கள்.
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை
h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்

**3.** மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துகடைகள், உணவகங்கள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்.

**4.** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருபோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

## II தண்டனைகள் விவரம்

பிரிவு 306 (28–A) இன் படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | பயன்படுத்தக்கூசடிய மற்றும் தூக்கி வீசப்படகூடிய நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.25000/- இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ரூ.50000/- ஐம்பதாயிரம் ரூபாய் | ரூ.100000/- ஒரு இலட்சம் ரூபாய் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள், மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10000/- பத்தாயிரம் ரூபாய் | ரூ.15000/- பதினைந்தாயிரம் ரூபாய் | ரூ.25000/- இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3 | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000/- ஓராயிரம் ரூபாய் | ரூ.2000/- இரண்டாயிரம் ரூபாய் | ரூ.5000/- ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100/- நூறு ரூபாய் | ரூ.200/- இருநூறு ரூபாய் | ரூ.500/- ஐநூறு ரூபாய் |

ந.க.எண்.572/2016/எச்1

அலுவலக குறிப்பு: பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்காணும் பணத்தண்டம் தொகையினை வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர கட்டணத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.460 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ல் விதி எண்.23ல் கீழ்காணும் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குவது தொடர்பாக தொழில் சார்ந்த வல்லுநர்களை பதிவு செய்தல் வேண்டும். அதற்காக நகராட்சியில் கீழ்காணும் அலுவலர்களை கொண்டு பரிசோதனை குழு (Screening Committee) ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், அக்குழுவால் சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.50977/2018/டிபி2 நாள் 7.3.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பதிவு செய்ய வேண்டிய தொழில் சார்ந்த வல்லுநர்கள்**

கட்டடக் கலைஞர் (Architect), பொறியாளர் (Registered Engineer), கட்டமைப்பு பொறியாளர் (Registered Structural Engineer), கட்டுமான பொறியாளர் (Registered Construction Engineer), தர தணிக்கையாளர் (Registered Quality Auditor), புவியியல் பொறியாளர் (Registered Geo Technical Engineer), நகரமைப்பாளர் (Registered Town Planner), இயற்கை கட்டிட கலைஞர் (Registered Landscape Architect), மேம்பாட்டாளர் (Registered Developer)

அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் கீழ்காணும் அலுவலர்களை கொண்டு பரிசோதனை குழு (Screening Committee) ஏற்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பரிசோதணை குழு (Screening Committee)**

| வ. எண் | அலுவலரின் பதவி | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆணையாளர் | 1 |
| 2 | நகரமைப்பு அலுவலர் / நகராட்சி பொறியாளர் | 1 |
| 3 | நகரமைப்பு ஆய்வர் | 1 |

**அலுவலக குறிப்பு:**

இந்நகராட்சியில் தொழில் சார்ந்த வல்லுநகர்களை பதிவு செய்வதற்கான பரிசோதணை குழு (Screening Committee) அமைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.461 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி எல்லைக்குள் வீதிகளில், பிரதான சாலைகளில் கால்நடைகள் (மாடுகள்) பராரியாக திரிய விடுவதால் தற்சமயம் மேற்படி கால்நடைகளை பொது இடங்களில் பராரியாக திரிவதை தடுக்கும் விதமாக இரண்டு முறை அறிவிப்புகள் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு மேற்கொண்டு அவ்வாறு அலையவிட்டால் நகராட்சி மூலம் பிடித்து விஜிபி பொன் நகரில் உள்ள கொட்டத்தில் அடைத்து பராமரிக்க ஆகும் செலவினத்தினை ஈடு செய்யும் விதிமாக தெருவில் திரியும் மாடுகளை பிடிக்க கீழ்கண்டவாறு அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. கறவை மாடுகள் 1க்கு ரூ.2500/- நாள் ஒன்றுக்கு
2. சாதாரண மாடுகளுக்கு 1க்கு ரூ.2000/- நாள் ஒன்றுக்கு
3. கன்று 1க்கு ரூ.1500/- நாள் ஒன்றுக்கு

எனவே, தொடர்ந்து பொது மக்கள், நலசங்கங்கள் மற்றும் காவல்துறைகளில் இருந்து தெருவில் திரியும் கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் விதமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.462 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 15 வார்டுகளில் வசிக்கும் சுமார் 66340க்கும் மக்களாலும், வர்த்தகம் மற்றும் தொழிற்சாலை ஆகியவற்றின் மூலம் தினமும் இந்நகராட்சியில் 24 மெட்ரிக் டன் அளவிற்கு குப்பைகள் உற்பத்தயாகின்றன. அவற்றில் 50% மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் எரியக்கூடிய தன்மையுள்ள சுமார் 30% திடக்கழிவுகளை பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவை சேரமாகின்றன. மேலும், அதை கையாளுவதிலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, இது தொடர்பான பாதுகாப்பாக கையாளுதல் மற்றும் வெளியேற்றுதலுக்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு மேற்கூறிய திடக்கழிவுகளை இந்நகராட்சியின் நுன்னுயிர் உரமாக்கும் மையம், பசுமை உரக்குடில்கள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிப்பு மையம் ஆகிய பணிகளுக்கு இந்நகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் போதுமானதாக இல்லை. எனவே அதற்குரிய வாகன வசதிகள் நகராட்சியின் மூலம் ஏற்படத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டது. மேலும் இந்நகராட்சிக்கு 5 எண்ணிக்கை இலகு ரக வாகனங்களுக்கான (TATA ACE) தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதற்கான ஏற்படும் வகையில் உள்ளூர் இலகு ரக வாகனங்கள் (TATA ACE) சப்ளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து தோராய மதிப்பீடு கோரப்பட்ட வகையில் நாளொன்றுக்கு ரூ.1500/- (வாகன வாடகை, ஓட்டுநர் கூலி, பிபுல் செலவு உட்பட) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாளொன்றுக்கு 5 எண்ணிக்கைக் இலகு ரக வாகனங்கள் (TATA ACE) சப்ளை செய்வதற்கு தோராய செலவின மதிப்பீடு (ரூ.1500x5 வாகனங்கள் = ரூ.7500/-) மாதத்திற்கு சுமார் 2.50 இலட்சம் வீதம் மூன்று மாதங்களுக்கு மொத்தம் ரூ.7.50 இலட்சத்திற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.351 நாள் 28.9.2018 ன் படி ஒப்புதல் பெறப்பட்டு மூன்று மாதங்களுக்கு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்கனவே ஜனவரி 2019 மாதம் நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Battery Operated Vehicle கொள்முதல் செய்து வாகனங்கள் இந்நகராட்சியில் பெறுவதில் காலதாமதம் ஏற்படும் வகையில் கூடுதலாக ஒரு மாத காலத்திற்கு (மார்ச் 2019) நாளொன்றுக்கு 5 எண்ணிக்கை இலகு ரக வாகனங்கள் (TATA ACE) சப்ளை செய்வதற்கு தோராய செலவின மதிப்பீடு ரூ.1500/-x5 வாகனங்கள் = ரூ.7500/- மாதத்திற்கு சுமார் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று செயல்படுத்த ஆணையரின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.463 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள காம்பாக்டர் வாகனம் பதிவு எண்.TN11 Q6615 மற்றும் TN11 AB3773 ஆகிய இரு காம்பாக்டர் வாகனங்கள் கீழ்காணும் பழுதுகளினால் வாகனத்தினை இயக்க முடியாமல் நின்று விட்டது. இதன் காரணமாக உலர் கழிவுகளை அகற்றுவதில் தடை ஏற்பட்டது. பொது மக்கள், நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் வணிகர்கள் ஆகியோரிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வரப்பெற்றுள்ளன. பொது சுகாதாரப்பணியினை தொய்வின்றி மேற்கொள்ள ஏதுவாக மேற்காணும் இருவாகனங்களையும் அவசர அவசியம் கருதி உடன் பழுது நீக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது.இப்பொருள் சார்ந்து அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையினை கோரப்பட்டது. அப்பணிமனையின் தொழில் நுட்ப பணியாளரை கொண்டு ஆய்வு செய்த வகையில், வாகனத்தில் கீழ்காணும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள 20.2.2019ம் தேதியில் கோரப்பட்ட விலைப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் பார்வைக்கும், அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெஸ்ஸர்ஸ். எம்.கே.எஸ். மோட்டார்ஸ், சென்னை 117 என்கிற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | எம்.கே.எஸ். மோட்டார்ஸ் ம.எண்.6, ஸ்ரீ பாரத் நகர், பல்லாவரம், சென்னை 117. | கே.எஸ்.ஆர். மோட்டார்ஸ் நெ.13, லட்சுமி நகர் நெடுங்குன்றம், வண்டலூர், சென்னை 48. | ஸ்ரீ சாய்ராம் ஆட்டோ கேரேஜ் நெ.3, இங்கிளிஷ் ரேடியல் ரோடு, பல்லாவரம் துரைபாக்கம் ரோடு, சென்னை -600129 |
| 1 | Providing Complete Repair Works to Public Health Vehicle TN11 Q 6615 | ரூ.135000/- | ரூ.142000/- | ரூ.145000/- |
| 2 | Providing Complete Repair Works to Public Health Vehicle TN11 AB3773 | ரூ.122000/- | ரூ.129500/- | ரூ.134000/- |
| | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

அலுவலக குறிப்பு: குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.464 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் சொத்து வரி சீராய்வு மற்றும் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் பணியினை மேற்கொள்ள அத்தியாவசியமாக தேவைப்படும் கீழ்காணும் படிவங்களை அச்சடிக்க வேண்டிய அவசியம் கருதி, அதற்கான தோராய செலவினம் ரூ.0.60 இலட்சத்திற்கும், படிவங்களை அச்சடித்து வழங்கிட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோர தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Demand Notice with Acknowledgement | 15000 |
| 2 | 7 Days Final Notice Double Colour | 10000 |

அலுவலக குறிப்பு: மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்.465 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் வருமான வரி பிடித்தங்களுக்கு முறையே ஒவ்வொரு காலாண்டிற்கும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. இப்பணியினை வருமான வரி ஆலோசகர் மூலம் மேற்கொள்வதால், அதற்கான ஆலோசகர் கட்டணம் (நான்கு காலாண்டிற்கு) வழங்கிட தோராய செலவினம் ரூ.20000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் 2018-19ம் நிதியாண்டில் மூன்று காலாண்டிற்கு ரூ.15150/- ஐ திரு. உமாசங்கர், வருமான வரி ஆலோசகர் மூலம் வருமான வரி தாக்கல் செய்தமைக்கும், பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். மூன்று காலாண்டிற்கு பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.466 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

தமிழ்நாடு அரசு சட்டமன்ற பேரவை 2017–18ம் ஆண்டு கோரிக்கை எண்.12–ன்படியான அறிவிப்பு:-

நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலுள்ள தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள், தூசி மணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையங்களில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல், மழைநீர் வடிகால்வாய்களில் தேங்கும் அடைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பொது மக்களின் சுகாதாரத்திற்காக செய்து

வருகின்றனர். இது போன்ற துப்புரவுப் பணிகளால் துப்புரவு பணியாளர்களுக்கு அடிக்கடி உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படியும், மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்படும் என மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம், அவர்களின் கடிதம் ந.க.எண்.4505/2014/பி1 நாள்.23.11.2017–ல் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் குப்பை அகற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுவரும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் இதர கடை நிலை ஊழியர்களுக்கு நகராட்சியின் பங்களிப்புடன் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்த மன்றத் தீர்மானம் நிறைவேற்றி பிரேரணை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி செம்பாக்கம் நகராட்சியில் பணிபுரிந்து வரும் 19 துப்புரவு பணியாளர்களுக்கு நகராட்சியின் பங்களிப்புடன் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.302/2018/சி1**

**தீர்மான எண்.467 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக கடந்த 2016 முதல் 55 DBC டெங்கு தடுப்பு பணியார்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2016 மற்றும் 2018 டெங்கு இல்லா செம்பாக்கம் நகராட்சி என்றளவில் DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் (90 நாட்கள் 15.1.2019 முதல் 15.4.2019 வரை) 15.4.2019ம் தேதியுடன் முடிவடைவதாலும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து

செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.468 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பு ஊசி போடும் பணிகளை புளூ கிராஸ் ஆப் இந்தியா என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பு ஊசி போடும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக நிர்ணயித்த கட்டணம் ஒரு நாய்க்கு ரூ700/–வீதம் தோரய செலவினமாக ரூ.2.00 இலட்சத்தற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.469 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016-ன் உட்கூறு 15ல் வலியுறுத்தியவாறும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேம்படுத்திட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி மாநில கண்காணிப்பு குழு வலியுறுத்தியவாறும் திடக்கழிவு மேலாண்மை திட்ட கொள்கை (Policy) மற்றும் செயல் திட்ட (Strategy) வரைவினை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்திடவும், அதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
ந.க.எண்.558/2018/எச்1 நாள் 6.3.2019

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.470 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பிறப்பு பதிவுகள், இறப்பு பதிவுகள் என 1985 முதல் 2017 வரை உள்ள பிறப்பு இறப்பு பதிவுகளை Online பதிவேற்றம் செய்திடவும், பொது மக்கள் பிறப்பு இறப்பு சான்றுகளை நேரடியாக Online மூலம் பதிவிறக்கம் செய்து கொள்வது சம்பந்தமாக தொடர்ந்து ஆய்வு கூட்டங்களில் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நிர்வாக மண்டல இயக்க்நர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் 15000ற்கும் மேற்பட்ட பிறப்பு, இறப்பு பதிவுகளை Online

updation மேற்கொள்ளும் பொருட்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்வதற்கான தோராய செலவினம் தொகை ரூ.75000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும், தோராய செலவின மதிப்பீட்டு தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.471 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

செம்பாக்கம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 49 பணியாளர்கள் பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.32976/ஜெ3/2018 நாள் 11.1.2019 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 6.3.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. 6.3.2019ம் தேதியன்று இணையதளம் (Online) வழியாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. நேரடியாக இவ்வலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூலம் பெறப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | ஓப்பந்தாரர் பெயர் திரு / திருமதி/ திருவாளர்கள் |
|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 49 பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் சப்ளை செய்தல். | 82.00 | 1.M/s.S.R. Manpower Consultancy, No.464/928.T.H Road, Old Washermenpet, Chennai -21. |
| | | | 2.M/s. Saram Enviro Services Pvt Ltd. Adhithya Enclave, B3/119, 2nd Floor 6th Main Road, Eri Salai, Mogappair West, Chennai-37. |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் இரண்டு உறைகளில் தொழில்நுட்ப உறை பிரிக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. இதில் Saram Enviro Services Pvt Ltd. நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. மேலும் S.R. Manpower Consultancy நிறுவனம் தொழில் நுட்ப தகுதி பூர்த்தி செய்வதாக குழுவால் முடிவு செய்யப்பட்டது. மேலும் பாராளுமன்ற தேர்தல் 2019 நன்னடத்தை விதிகள் அமலில் வர உள்ளதால், வரப்பெற்ற ஒப்பந்ததாரரிடம் இன்று மாலை 5.00 மணியளவில் விலைப்புள்ளி பிரிக்க சம்மதம் பெறப்பட்டு

விலைப்புள்ளி உறை கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் பிரிக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டை விட 0.18% குறைவாக விலை விகிதம் வழங்கி உள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியுடைய S.R. Manpower Consultancy, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் வழங்கியுள்ளதை ஒப்பந்தப்புள்ளி குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று Letter of Acceptance ஒப்பந்ததாரருக்கு வழங்கி உரிய கூடுதல் வைப்புத் தொகை பெற்று சப்ளை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

2. 49 பணியாளர்களை ஓர் ஆண்டிற்கு பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்வதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.472 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக கடந்த 2016 முதல் 55 DBC டெங்கு தடுப்பு பணியார்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2016 மற்றும் 2018 டெங்கு இல்லா செம்பாக்கம் நகராட்சி என்றளவில் DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் (90 நாட்கள் 15.1.2019 முதல் 15.4.2019 வரை) 15.4.2019ம் தேதியுடன் முடிவடைவதாலும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.473 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் விவரப்படியாக பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய தெருவிளக்கு பணியாளர்கள் இல்லாத காரணத்தின் பேரில், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் (இயக்குதலும், பராமரித்தலும்) ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்த காலம் **31.5.2019**ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tuble Lights | 694 |
| 2 | 85 W CFL | 1404 |
| 3 | 27 W CFL | 61 |
| 4 | 150 W SV Lamps | 115 |
| 5 | 250 W SV Lamps | 1215 |
| 6 | 2x36W TS Energy Saver Lights | 125 |
| 7 | 4x24W TS Energy Saver Lights | 235 |
| 8 | LED 50w | 102 |
| 9 | LED 36w | 96 |
| 10 | LED 18w | 240 |
| 11 | 250 W MHL | 148 |
| 12 | 400 W MHL | 162 |
| 13 | 150 W MHL | 23 |
| | Total | 4620 |

**அலுவலக குறிப்பு:** 1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒரு வருட கால நீட்டிப்பு அனுமதி பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தெருவிளக்கு பராமரிப்பு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.474 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி